

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோவாளை வட்டம், நாவல்காடு அரசு தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (13.07.2016) வழங்கினார். நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ச.மதியழகன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 437/2016 நாள்: 13.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாவல்காடு அரசு தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் சிறப்பு முகாமில் 22 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (13.07.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தோவாளை வட்டம், நாவல்காடு வருவாய் கிராமத்திற்குட்பட்ட ஈசாந்திமங்கலம் ஊராட்சி, நாவல்காடு அரசு தொடக்கப்பள்ளியில் இரண்டாம் கட்ட மனுநீதி நாள் சிறப்பு முகாம் இன்று (13.07.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், ஏற்கெனவே நடைபெற்ற முதற்கட்ட நிகழ்ச்சியின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் பதில்கள் வாசிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ், 10 பயனாளிகளுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகையும், 3 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகையும், ஒரு மாற்றுத்திறனாளி பயனாளிக்கு உதவித்தொகையும், ஒரு பயனாளிக்கு முதிர்கன்னி உதவித்தொகையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ஒரு பயனாளிக்கு உதவித்தொகையும், என மொத்தம் 16 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- பெறுவதற்கான ஆணைகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு தலா ரூ. 3,414/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், வேளாண்மைத்துறை சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், செண்பகராமன்புதூரை சார்ந்த திருமதி. வசந்தா என்பவருக்கு முழுவிலை ரூ.60/- (50 சதவீத மானியம் ரூ.30/-) நெட்டை x குட்டை தென்னங்கன்றுகளும், ராகவுமுத்து என்பவருக்கு முழு விலை ரூ.245/- (50 சதவீத மானியம் ரூ.123/-) இனக்கவர்ச்சி பொறி, நாவல்காடை சார்ந்த திருமதி. ராஜாபாய் என்பவருக்கு முழு விலை ரூ.40/- (50 சதவீதம் மானியம் ரூ.20/-) நெட்டை தென்னங்கன்றுகளையும், நாவல்காடு, திரு. அருமைநேசன் என்பவருக்கு இணையவழி மூலம் பட்டா மாறுதல் ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள வழங்கினார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு.ச.மதியழகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், துணை ஆட்சியர் (சிறப்பு திட்டங்கள்) திரு. ரவி, துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புதிட்டம்) திரு. சந்திரன், தோவாளை வட்டாட்சியர் திரு. லெ.முத்துலெட்சுமி, தோவாளை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு. ஏ.ஆர்.பூதலிங்கம்பிள்ளை, ஈசாந்திமங்கலம் ஊராட்சித்தலைவர் திரு. அருணாச்சலதேவர், தோவாளை சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திருமதி. சாரதாமணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. பிரம்மநாயகம், உதவி இயக்குநர் (வேளாண்மைதுறை) திருமதி. ஆணிஜாண் சுஜாதா, உதவி பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) வர்க்கீஸ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.